<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 395/2012 | சாட்சி | பி.வா.சா.3 |
| பெயர் | செல்வராஜ் | நாள் | 08.12.2022 |
| தகப்பனார் பெயர் | முனியப்ப கவுண்டர் | | |

<u>**வாதி தரப்பில் பி.வா.சா.3 குறுக்கு விசாரணை :-**</u>

1) நான் அச்சு பிணைக்கும் தொழில் செய்து வருகிறேன். நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நன்கு தெரியும். என்னை சாட்சி சொல்ல 1ம் பிரதிவாதி வையாபுரி அழைத்து வந்தார். வையாபுரி எனக்கு பங்காளி வகையில் மாமன் முறை வேண்டும்.

2) வையாபுரியின் தந்தை குப்பண்ண கவுண்டரின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. குப்பண்ண கவுண்டரின் வாரிசுகள் பழனியப்பன், வையாபுரி, மயிலி (எ) மயில், அம்மாசி, சின்னப்பொண்ணு ஆகியோர்கள் தான் என்றால் சரிதான். பெரம கவுண்டன் என்பவர் மேற்படி 1ம் பிரதிவாதி வையாபுரியின் மகன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி அம்மாசி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3) அம்மாசியின் என்பவர் பெண் ஆவார். அம்மாசியின் கணவர் பெயர் முத்து. முத்து தற்போது இறந்துவிட்டார். அம்மாசி சுமார் 7 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவர் கணவர் முத்து சுமார் 15 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

4) அம்மாசியின் வாரிசுகள் தான் துரைசாமி, மகாலிங்கம், சின்னதம்பி ஆகியோர்கள் என்றால் சரிதான். குப்பண்ண கவுண்டருக்கு மொத்தம் எவ்வளவு சொத்து இருந்தது என்றால் 1 ஏக்கர் நிலம் தான் இருந்தது. மேற்படி நிலத்திற்கு நான்குபுற செக்குபந்தி விவரங்கள் எனக்கு தெரியாது.

5) குப்பண்ண கவுண்டர் இறந்து சுமார் 40 வருடங்கள் இருக்கும் வருடம் சரியாக எனக்கு தெரியாது. குப்பண்ண கவுண்டரின் மனைவி பெயர் அய்யம்மாள். அவர் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். வருடம் எனக்கு சரியாக தெரியாது. குப்பண்ண கவுண்டரும்,அய்யம்மாளும் குப்பண்ண கவுண்டர் உயிருடன் இருக்கும்

காலத்தில் ஒன்றாகத்தான் வசித்து வந்தனர் என்றால் சரிதான்.

6) அய்யம்மாள் வீட்டு குடித்தனம் தான் செய்து வந்தார். குப்பண்ண கவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை எப்பொழுது பாகப்பிரிவினை செய்துகொடுத்தார் என்றால் எந்த வருடம் என எனக்கு தெரியாது, ஆனால் சுமார் 40 ஆண்டுகள் இருக்கும்.

7) என் பிரமாண பத்திரிக்கையில் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பாகம் பிரித்து கொடுத்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. என் பிரமாண பத்திரிக்கையில் யார் யார் இருந்து பாகம் பிரிக்கப்பட்டது என நான் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை.

8) என் பிரமாண பத்திரிக்கையில் பாகப்பிரிவினையின் போது யார் யாருக்கு எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணத்தில் நிலம் ஒதுக்கப்பட்டது என நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தற்போதும் என்னால் அதுகுறித்து சொல்ல இயலாது.

9) யார் யாருக்கு தாவா சொத்தில் வீடு உள்ளது என்றால் வையாபுரி, பழனியப்பன் ஆகியோர்களுக்கு வீடுகள் உள்ளது. மேற்படி வீடுகளின் எண்கள் எனக்கு தெரியாது. மின்இணைப்பு எண்களும் எனக்கு தெரியாது.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.3 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஓம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.